கௌரவ தவிசாளர் அவர்களே! எங்களுடைய செலவீனங்கள், அபிவிருத்திப் பணிகளுக்காகப் பணம் போதாது இன்றும் மத்திய அரசிடம் கைநீட்டி இருக்கின்ற அவல நிலையினை தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றோம். கிழக்கு மாகாணத்தினுடைய வருமானத்தை முடக்குவதற்காக வேண்டுமென்றே சதிசெய்து, கிழக்கு மாகாணம் என்றும் மத்திய அரசில் கைநீட்டி நிற்க வேண்டிய இரண்டாம் தர மாகாணமாகக் கருதப்பட வேண்டும். ஒரு திட்டத்தின் அடிப்படையில் சில காரியங்கள் இடம்பெறுகின்றதா? கிழக்கு மாகாணம் தன்னுடைய சொந்தக் காலில் நிற்கக்கூடாது. இந்த மாகாணம் கௌரவமான மாகாணம். இந்த மாகாணத்தினுடைய மக்கள் கௌரவமானவர்கள். அவர்கள் தங்களுடைய காரியங்களுக்கான பணங்களைத் திரட்டக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள் என்ற நிலமையினை அடையக்கூடாது. மத்திய அரசிடம் கைநீட்டி வைக்கக் கூடிய சூழலை உருவாக்குவது மத்திய அரசினுடைய திட்டமிட்ட செயற்பாடு என்பதனை இன்று உணர்திருப்பினும் கூட, கண்ணை மூடிக் கொண்டவர் களாக அல்லது வேண்டுமென்றே தூங்கியவர்களை எப்பொழுதும் எழுப்ப முடியாது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தூங்கியவர்களாக இருந்து கொண்டிருக்கின்றோமா? என்ற கேள்வியினை எனக்கு நானே கேட்டுக்கொண்டு உங்களுக்கு எதிராகவும் இந்தக் கேள்வினை நான் தொடுக்க விரும்புகின்றேன்.

கௌரவ மாகாண சபை உறுப்பினர்களே! எமது மக்கள் மீது வரிச் சுமையினை சுமத்துவதாக ஒரு சிலர் கருதக்கூடும். எமது மக்கள் என்றும் அந்த வரிச் சுமையில் இருந்து மீட்டுவிக்கப்பட வேண்டும். அவர்களுடைய வரிகள் அவர்களைத் தாங்க முடியாத அளவிற்கு அவர்கள் மீது சுமத்தப்படக் கூடாது என்று சிலர் கருதக்கூடும். ஆனால், இங்கு நான் கூறுகின்ற விடயம் அந்தக் காணிகள் என்னுடைய தொழிலுடன் சம்பந்தப்பட்டது என்றாலும் எங்களுடைய சட்டத்தரணி அந்த Legal profession அதாவது சட்டத் தொழில் எனப்படுவது இரண்டு வகையான தொழில்களைக் கொண்டுள்ளன. அதாவது நீதிமன்றங்களுக்குச் சென்று சட்ட விவாதங்களை மேற்கொள்வது, கட்சிக்காரர்கள் சார்பாக அவர்களுடைய விடயங்களை நீதிமன்றத்தின் முன்னால் ஒப்புவிப்பது என்பது ஒருபுறம் இருக்க, அந்த உறுதி மாற்றங்களின் பொழுது காணிகளை வாங்குகின்ற விற்கின்ற, காணிகளைக் கொள்வனவு செய்கின்ற ஒப்பந்தத்தினைக் கொடுக்கல் வாங்கலினை அல்லது இரு நபர்களுக்கு இடையில் ஏற்படுத்தப் படுகின்ற கொடுக்கல் வாங்கல்களை எழுதிக்கொள்வது போன்ற பல விடயங்கள் அங்கு காணப்படுகின்றன. அது ஒருபுறம் இருக்க... பிரசித்த நொத்தாரிஸ் எனப் படுகின்ற காணிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சில நபர்களினால் அந்த விடயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஏனென்றால், மக்களுக்கு இடையே இருக்கின்ற கொடுக்கல் வாங்கல் அனைத்தும் எழுத்தில் இருக்க

வேண்டும். அப்பொழுதுதான் அந்த விடயத்தில் பிணக்குகள் ஏற்படுத்தப்படும் பொழுது அந்தப் பிணக்குகள் தீர்க்கப்படும் என்பதற்காக சட்டம் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர்... ஏன் சட்டம் என்று கூறுகின்றோம். எனக்கு அல்-குர்ஆனை ஓதுகின்ற போதும்கூட அங்கு ஒரு வாசகம் காணப்படு கின்றது. உங்களுக்கு இடையில் ஏற்படுத்தப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களை நீங்கள் எழுதிக் கொள்ளுங்கள். அதற்கு இரண்டு சாட்சியாளர்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எழுதுவிப்பதற்காக ஒருவரை நியமித்துக் கொள்ளுங்கள். அவருக்கு நீங்கள் கூலி கொடுப்பதும் உங்கள் மீது தவறாகாது என்று அல்-குர்ஆன் வசனம் கிட்டத்தட்ட 1400 வருடங்களுக்கு முன்னரே இந்த 200 வருடங்களுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட உங்களுடைய prevention of fraud ordinance மோசடித் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட வாசகங்களை 200 வருடங்களுக்கு முன்னர் ஒப்புவிக்கப்பட்ட அந்த வாசகங்களை 1400 வருடங்களுக்கு முன்னர், ஏன் அதற்கு முன்னர் இருந்த வேதங்களிலும் கூட இவைகள் இடம்பெற்றிருக்க முடியும். ஆனால், எனக்கு அதைப்பற்றி நிச்சயமாகத் தெரியாது. எனக்குத் தெரிந்த அல்-குர்ஆன் வாசகத்தை நினைவுபடுத்தி எழுதப்பட வேண்டும். எழுதப்படுவதற்காக ஒருவர் நியமிக்கப் படலாம். அவருக்குக் கூலி கொடுக்கப்படலாம் என்ற வாசகங்கள் இருப்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

ஆகவே, கௌரவ தவிசாளர் அவர்களே! இதற்கும் எமது அரசினுடைய கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தின் வருமானத்திற்கும் என்ன சம்பந்தம் என்றால், காணிகள் கொடுக்கல் வாங்கல் செய்யும் போது அந்தக் காணிகள் விற்பனையாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் விற்பனைப் பெறுமதியில் 4 வீதம் அரச வரியாக அறவிடப்படுகின்றது. ஒரு இலட்சத்திற்கு 4000 படியும், முதல் ஒரு இலட்சத்திற்கு 3000 படியும் அடுத்த ஒவ்வொரு இலட்சத்திற்கும் 4000 படியும் இலட்சத்திற்கு 4 வீதப்படி இந்த வரி அறவிடப்படுகின்றது. அதுவே ஒரு நன்கொடையாக இருக்கும் என்றால், அது 2 வீதப்படியும், அதுவே குத்தகை உடன்படிக்கையாக இருக்கும் என்றால் அதற்கு ஏற்ற வரி வீதப்படியும் அல்லது பணப்பரிமாற்றம், நிலங்கள் அற்ற வேறு கொடுக்கல் வாங்கல் என்றால் அதற்கு ஏற்ற முத்திரை வரிகளும் அங்கு கூறப்படுகின்றன. கௌரவ தவிசாளர் அவர்களே! இந்த முத்திரை வரிக்கு என்ன நடக்கின்றது என்பதனை நாங்கள் கருத்தில் எடுத்துப் பார்ப்போமானால், இந்த முத்திரை வரி 2006 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் இவ்வரி அனைத்தும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு செலுத்தப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

ஆகவே, எந்தெந்த உள்ளூராட்சி சபைகளுக்குள் அந்தக் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகின்றதோ அந்த உள்ளூராட்சி சபைக்குத்தான் அந்த வரி போய்ச்சேர வேண்டும். உள்ளூராட்சி சபை தன்னுடைய செலவீனங்களுக்காக வரிப்பணத்தினை அந்த மக்களுக்காக செலவிட முடியும் என்று தெளிவாகக் கூறுகின்றது. ஆனால், எமது கிழக்கு மாகாணத்தைத் தவிர அனைத்து மாகாணங்களிலும் காணிகள் பதிவகம் திணைக்களத்திலும் உண்மையான விற்பனை விலையினை அந்த உறுதிகளில் போடப்பட வேண்டும் என்பதனை உறுதிப்படுத்துவதற்காக பிரசித்த நொத்தாரிஸிடமிருந்து ஒரு சத்திய ஓலையும் பெறும் விலைமதிப்பீட்டாளரிடம் இருந்து ஒரு அறிக்கையும் பெறப்பட வேண்டும் என்று அந்தந்தக் காணிப் பதிவகங்களில் அந்த மாகாண வரித் திணைக்களினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து அதனை அவதானிக்கின்றார்கள்.

ஆனால், இங்கு கிழக்கு மாகாணத்தில் அந்த விடயம் இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. வேண்டுமென்றே இந்த மாகாணத்தில் ஒழுங்கான ஒரு வரி வருமானம் இருக்கக் கூடாது என்பதனைத் திட்டமிட்டு கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் இது இடம்பெறுவதில்லை. கொழும்பிற்குச் சென்று காணிகள் வாங்குவோ மென்றால், அங்கு 100 வீதமான பெறுமதி போடப்பட வேண்டும். கண்டி மாகாணத்திற்குச் சென்று அங்கு காணி வாங்குவோமென்றால் 100 வீத விற்பனைப் பெறுமதி போடப்பட வேண்டும். அவ்வாறே தென் மாகாணம் மற்றும் அனைத்து வட மத்திய மாகாணங்களிலும் இவ்வாறான நடைமுறை அமுல்படுத்தப்படுகின்ற பொழுது, இம் மாகாணத்தினுடைய வரி வருமானத்தினை அதிகரிக்க கௌரவ முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அதிகாரத்தினைப் பயன்படுத்தி இதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

ඔබතුමාට බොහොම ස්තූතියි!... ගරු ප්‍රධාන අමාත්‍යතුමා, වෙනත් පළාත් සභාවල ඒ විදිහට තක්සේරු ගාස්තුව ගෙවන්න ඕන. ගෙවන්නේ නැතුව ලියාපදිංචි කරන්න බැහැ. එතුමා ඉදිරිපත් කළ යෝජනාව හොඳ ආදායම් මාර්ගයක්. ඔබතුමා ඒ ගැන අදහස් ප්‍රකාශ කරන්න.

**கௌரவ முதலமைச்சர் ஏ. நசீர் அகமட்**
**ගරු ප්‍රධාන අමාත්‍ය ඒ. නසීර් අහමඩ් මැතිතුමා**
**Hon. Chief Minister A. Nazeer Ahamed**

கௌரவ உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் அவர்களுடைய பிரேரணை நல்ல பிரேரணை. பொது மக்களிடம் அடி வாங்குகின்ற பிரச்சினையாக இருந்தாலும் மாகாணத்திற்கு வருமானம் சேர்க்கின்ற பிரேரணை. அதை எவ்வாறு அமுல்படுத்த முடியும்? நடைமுறைச் சிக்கல்கள் அதிகம் இருக்கின்ற வேளையில் எவ்வளவுதான் அதற்கு விலை நிர்ணயம் என்கின்ற விடயத்தை நாங்கள் அமுல்படுத்த நினைத்தாலும் அதற்குள் குழறுபடிகள் இங்கு மாத்திரம் அல்ல ஒட்டு மொத்தமாக இருக்கின்ற யதார்த்தத்தை நாங்கள் எல்லோரும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். எல்லா

இடங்களிலும்... அந்த valuer நிறைய உழைக்கின்ற விளையாட்டுக்கள் அதிகம் நடக்கின்ற விடயமும் இந்த நாட்டிலே நடந்துகொண்டு வருகின்றது. அவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு எவ்வாறு இலகுவான முறையில் இதை அமுல்படுத்த முடியும். அதற்கான சட்ட வரைபுகளை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பது பற்றிக் கலந்துரையாடி ஒரு முடிவை எடுக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறோம்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

ගරු මහ ඇමතිතුමා, ස්තූතියි!... න්‍යාය පත්‍රයේ 4.(16) යටතේ ඩී.ඩී.මෙත්තානන්ද සිල්වා මන්ත්‍රීතුමා ගරු සෞඛ්‍ය ඇමතිතුමාට ඉදිරිපත් කරන යෝජනාව.

**கௌரவ உறுப்பினர் டீ.டீ.மெத்தானந்த த சில்வா**
**ගරු මන්ත්‍රී ඩී.ඩී.මෙත්තානන්ද ද සිල්වා මැතිතුමා**
**Hon. Member D.D.Meththananda De Silva**

ගරු සභාපතිතුමනි. ඊයේ මෙම යෝජනාව මම ඉදිරිපත් කරලා, ස්ථිර වුණා. ගරු සභාපතිතුමනි, ගරු සෞඛ්‍ය ඇමතිතුමා ඒ අවස්ථාවේ හිටියේ නැතිනිසා සාකච්ඡාවට ගත්තේ නැහැ. ඒනිසා මම කෙළින්ම කරුණු ඉදිරිපත් කරන්නම්.

ගරු සභාපතිතුමනි, අපි යෝජනා කරන්න හිතුවේ අම්පාර සෞඛ්‍ය බල ප්‍රදේශයේ දෙහිඅත්තකණ්ඩිය සෞඛ්‍ය සේවා නිලධාරි කොට්ඨාශයේ පවුල් සෞඛ්‍ය සේවා නිලධාරීන් 7දෙනෙකුගේ පුරප්පාඩු පවතිනවා. මේ සම්බන්ධව ප්‍රාදේශීය සෞඛ්‍ය අධ්‍යක්ෂ විසින් අටුව කඩලා පුටුව හදනවා වගේ ඇතුලේ ඉන්න අය මාරුකරලා, තවත් ප්‍රශ්නයක් ඇතිකරන්න හදපු අවස්ථාවේ, මම ගරු සෞඛ්‍ය ඇමතිතුමාට දුරකථනයෙන් කතා කළාම, එතුමා පසුදිනම ඇවිල්ලා සාකච්ජාවක් කරලා, ඒ තත්ත්වය වෙනස් කරලා, මේ අතිරික්තය හඳුනාගෙන ක්‍රියාකරන්න වෙනම සාකච්ජාවක් පවත්වනවයි කියලා, එකඟ වුණා.

ගරු සභාපතිතුමනි, මම ඊයේ හවස පළාත් සෞඛ්‍ය අධ්‍යක්ෂතුමාත්, නියෝජ්‍ය පළාත් සෞඛ්‍ය අධ්‍යක්ෂතුමාත්, එතුමාගේ කාර්යාලයට ගිහිල්ලා මේ පිළිබඳව සාකච්ජා කළා. එතකොට එතුමා පෙන්වලා දෙනවා, ප්‍රාදේශීය සෞඛ්‍ය නිලධාරී කාර්යාලවල ඒ කියන්නේ ග්‍රාමීය රෝහල්, මූලික රෝහල්, පරිභාහිරව ගත්තම දෙහිඅත්තකණ්ඩියෙ තියෙන්නේ 3දෙනෙකුගේ අඩුවක් විතරයි කියලා. එතකොට කල්මුණේ එතුමා කියන්නෙත් 26 දෙනෙකුගේ අතිරික්තයක් නැහැ, තියෙන්නේ 5දෙනෙකුගේ අතිරික්තයක්, නමුත් රෝහල්වල ඉන්න ප්‍රමාණය බලපුවම 26 දෙනෙකුගේ අතිරික්තය ඉන්නවා කියලා එතුමා පිළිගන්නවා. නමුත් රෝහල්වල ඉන්න අතිරික්තය අඩුකරන්න බැහැයි කියන එකයි, එතුමාගේ තර්කය. ඉතින් කොහොම වුණත් මම යෝජනා කරනවා, අම්පාර, දමන, උහන ඉන්න අය දෙහිඅත්තකණ්ඩියට දාලා, තවත් ප්‍රශ්නයක් ඇතිකරන්නේ නැතිව, අපේ පළාත්වල ඉන්න පවුල් සෞඛ්‍ය සේවිකා නිලධාරිණියන් ඒරාවූර් ප්‍රදේශවල, මඩකලපුවේ, ඊළඟට පළාතෙන් පරිබාහිරවත් කටයුතු කළ නිසා දෙහිඅත්තකණ්ඩියට එන්න කැමති කට්ටිය පිළිබඳව විවෘත දැනුම්දීමක් කරලා, ඒ පිළිබඳව මධ්‍යම රජයේ සෞඛ්‍ය අමාත්‍යාංශයේත් අනුමැතිය ලබාගෙන, යුක්තිසහගත සාධාරණ විසඳුමකට යන්නෙයි කියන එකයි මම මේ අවස්ථාවේ ගරු සෞඛ්‍ය ඇමතිතුමාට යෝජනා කරන්නේ.

ඊළඟට ගරු සභාපතිතුමනි, අට්ටාලචේනෙයි MOH Office එක යටතේ ක්‍රියාත්මක වෙන කල්මුණේ ප්‍රාදේශීය සෞඛ්‍ය අධ්‍යක්ෂවරයා යටතේ තියෙන එකම සිංහල ප්‍රාදේශීය රෝහල දීඝවාපිය. මම අයවැය වෙලාවේදීත් මේක කිව්වා. දීඝවාපියේ අපට වෛද්‍යවරුන් දෙපොළක් ඉන්නවා. හැබැයි, එකම Nurseලා කෙනෙක්වත් එකම Midwifeලා කෙනෙක්වත් නැහැ. එතකොට කල්මුණේ අතිරික්තයක් පේනවා. කල්මුණේ අතිරික්තයක් තියෙන්නේ ප්‍රාදේශීය සෞඛ්‍ය වෛද්‍ය අධ්‍යක්ෂවරයා යටතේමයි. එතකොටත් දිඝවාපි එකම සිංහල රෝහල තියෙන්නෙත් කල්මුණේ ප්‍රාදේශීය සෞඛ්‍ය වෛද්‍ය අධ්‍යක්ෂවරයා යටතේමයි. එතකොට 26ක් වැඩිපුර තියාගෙන එයින් දෙන්නෙක් දීඝවාපියට දෙන්න බැහැයි කියනකොට, මට පේන්නේ ඒක ජාතිවාදියි කියලා. සිංහල මිනිස්සුන්ට සලකන්නේ නැහැ කියලා. ඒක නිසා අපේ වර්තමාන සෞඛ්‍ය ඇමතිවරයා අට්ටාලචේනෙයි. කලින් ප්‍රාදේශීය සභාවේ සභාපති. එතුමාගේ බලප්‍රදේශයේ තමයි, දීඝවාපිය තියෙන්නේ.

එතකොට ගරු සභාපතිතුමනි, ඔබතුමත් දන්නවා මේ වෙනකොටත් දීඝවාපිය අපේ ගර්භනී වාට්ටුවක් හදලා දැන් විවෘත කරන්න ලෑස්තියි. අපේ Doctor අරුණ සිරිසේන මන්ත්‍රීතුමා කිව්ව වගේ වාන්ඇළ කලින් තිබුණු ග්‍රාමීය රෝහලේ පළමුවෙනි දරුව හම්බවුණා වගේ මමත් ආසාවෙන් බලන්ඉන්නවා, සෞඛ්‍ය ඇමතිතුමත් සම්බන්ධ කරගෙන, සභාපතිතුමත් සම්බන්ධ කරගෙන, දීඝවාපී ඉස්පිරිත්තාලේ පළමුවෙනි දරුවා හම්බවෙන දවසට තෑගි භෝගත් අරන් එතෙන්ට යන්න. ඒක මගෙත් ආශාවක්. මගේ හීනයක්. ඒක නිසා මම ගරු සෞඛ්‍ය ඇමතිතුමාට කියනවා.

ඊයේ පළාත් සෞඛ්‍ය අධ්‍යක්ෂතුමා මාත් එක්ක එකඟවුණා, මාස තුනකට කිරාන් ඉන්න Midwife එක්කෙනෙක් හෙට ඉඳලා දීඝවාපියට තාවකාලිකව දෙන්නම් කියලා. එම තාවකාලික ප්‍රතිකර්මය යෙදීම ගැන, මම එතුමාට ස්තුතිවන්ත වෙනවා.

ඒ නිසා සෞඛ්‍ය ඇමතිතුමාට ඉතාමත් කරුණාවෙන් ගෞරවයෙන් කියනවා, දීඝවාපිය ගැන විශේෂ අවධානයක් යොමු කරන්න කියලා. මේක අපට තියෙන වටිනාම ස්ථානයක්. දීඝවාපිය ගැන අපට අවුරුදු 2600ක ඉතිහාසයක් තියෙනවා. ඔබතුමන්ලාට තියෙන එකම සිංහල ගම්මානය. ඒ නිසා මේක පිළිබඳව ඔබතුමන්ගේ සුවිශේෂී අවධානය යොමු කරලා, අපට හෙදියන් දෙපොළක් හා Midwife දෙන්නෙක් ලබාදෙන්නෙයි කියලා. මොකද, ගර්භනි වාට්ටුව විවෘත කළාට වැඩක් නැහැ. Midwife නෝනා කෙනෙක් නැතිනම්. ඒවා වැඩේ කරන්නේ කවුද කියලා, මට හිතාගන්න බැහැ. ඒ නිසා ඔබතුමා මම මේ කියන කරුණු කාරණා පිළිබඳව පළාත් සෞඛ්‍ය අධ්‍යක්ෂවරයාගේ සුවිශේෂී අවධානය යොමු කරලා, මම යළිත් වතාවක් මේ සම්බන්ධව කතාකරන්න ඉඩ නොතබා මේ දීඝවාපී රෝහලට පවුල් සෞඛ්‍ය සේවක නිලධාරිණියන් දොපොළක් සහ මේ අනුමත සේවක සංඛ්‍යාවෙ ඉන්න, භාහිරව නොවෙයි, Cadre එකට ඇතුළත් Midwife දෙන්නෙක් කඩිනමින් ලබාදෙන්නෙයි කියන එකයි මම ඉල්ලා සිටින්නේ.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

හොඳයි ගරු මන්ත්‍රීතුමා, ඔබතුමාට බොහොම ස්තූතියි!...

**கௌரவ உறுப்பினர் இ. துரைரெட்னம்**
**ගරු මන්ත්‍රී ආර්. තුරෙයිරත්නම් මැතිතුමා**
**Hon. Member R. Thurairatnam**

கௌரவ தவிசாளர் அவர்களே! கௌரவ உறுப்பினரால் கொண்டுவரப்பட்ட பிரேரணை தொடர்பாகக் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர் தொடர்பான இதே பிரச்சினை மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் இருக்கின்றது. இங்கு கூறப்படுகின்ற தலைப்பு என்னவென்றால், தளவைத்தியசாலைகளில் மேலதிகமாகப் பணியாற்றுகின்றார்கள். அவர்களைக் கடந்த 2016 ஆம் ஆண்டு பொதுவான இடமாற்றத்தில் ஏன் இடமாற்றம் செய்யப்படவில்லை. மேலதிகமாக உள்ளவர்கள் அது வைத்தியக் குறைபாடாக இருக்கலாம், வேறு பிரச்சினைகளாக இருக்கலாம், தெரியாத இடங்களாக இருக்கலாம், பிரச்சினை உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். அடுத்து சுகாதார அமைச்சிற்கான பிரச்சினை என்னவென்றால், பல வைத்தியசாலைகளில் குடும்ப நல உத்தியோகத்தர்கள் இல்லை. இதில் ஆளணிக்கு ஏற்றால் போல் சமப்படுத்தல், ஆட்களை நிரப்புவதை விட்டுவிட்டு மேலதிகமாக ஆளணி உள்ள இடத்திற்கு ஆட்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றார்கள்.

ஆகவே, தயவுசெய்து கௌரவ அமைச்சர் அவர்கள் முதலாவது கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற வைத்தியசாலைகளில், கிராமங்களில் மேலதிகமாக உள்ளார்களா என்பதை அவதானித்து, அது இந்த வருடமே சீரமைக்கப்பட வேண்டும். அது இல்லாதபட்சத்தில் மேலதிகம் உள்ள இடங்களில் பலர் மேலதிகமாக செல்வதற்கான வாய்ப்புக்கள் வரும். இந்தச் சுகாதார அமைச்சின் கீழுள்ள தெளிகருவி இயக்குனர்கள் நீண்டகாலமாக வேலைசெய்து நாங்கள் சபையில் தீர்மானித்து, அவர்களுக்கு சுகாதார அமைச்சின்கீழ் நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு இன்று கௌரவ ஆளுநர் அவர்களின் பார்வைக்கும் கௌரவ சுகாதார அமைச்சரின் பார்வைக்கும் அது அனுப்பப்பட்டிருக்கின்றது. தெளிகருவி இயக்குனர்களைப் பொறுத்தவரையில் 08, 10 வருடமாகக் கிழக்கு மாகாணத்தில் வேலை செய்தவர்கள். நான்கு விடயங்கள் இருக்கின்றன. ஒரு சில காரணங்களுக்காக அந்த ஸ்தாபனங்கள் நிறுவப்பட்ட காரணத்தால் நியமனம் வழங்கப்படாமல் உள்ளன. அந்த நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். இரண்டாவது விடயம். முன்றாவது விடயம், அமைச்சரின் கவனத்திற்கு மத்திய அரசாங்கத்தில் சுகாதார அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை கௌரவ சுகாதார அமைச்சர் தன்னகத்தே வைத்துக் கொள்ள வேண்டும்.

2017 ஆம் ஆண்டு மத்திய சுகாதார அமைச்சினால் கிழக்கு மாகாணத்தில் ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்து அதை கௌரவ அமைச்சர் அவர்கள் அந்த நிதியைச் சரியாகப் பங்கிடாத நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. ஆனால், கௌரவ அமைச்சர் கொள்கைக்கு ஏற்றால் போல் மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. கடந்த இரண்டு வாரமாக மத்திய அரசாங்கத்தால் விபரங்கள் வெளியில் வந்து விட்டன. ஆகவே, தயவுசெய்து அதனைப் பரிசீலனை செய்து எந்தப் பகுதியும் புறக்கணிக்கப்படாமல் இருப்பதற்கும், மூன்று இனங்களும் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் கடந்த சபையில் பேசியிருந்தேன். வைத்தியத்துறை என்பது மனிதம். அந்த மனிதத்திற்கு அடையாளமாக மத்திய அரசாங்கத்திற்குரிய நிதி எந்த இனமும் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அடுத்து மூன்றாவது விடயமாக ஒப்பந்த அடிப்படையில் கௌரவ ஆளுநர் அவர்களால் கடந்த வாரம் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். நான் கடந்த வாரம் கூறியிருக்கின்றேன்.

ஆயுர்வேதம், சித்த ஆயுர்வேதம், யுனானி இந்த யுனானி சம்பந்தப்பட்ட விடயத்தில் ஆயுர்வேதம் முடித்து நம்பர்கள் எடுத்த 22 வைத்தியர்கள் தயார் நிலையில் இருக்கும் போது, குறிப்பிட்ட ஒருவருக்கு மட்டும் இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. 22 பேர் இலக்கத்தை எடுத்து நியமனத்திற்காக காத்திருக்கும் போது ஒருவருக்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு இடத்தைப் போட்டு ஒப்பந்த அடிப்படையில் யுனானி வைத்தியராக கௌரவ ஆளுநர் அவர்கள் நியமனம் செய்திருக்கின்றார். அப்படியென்றால், இந்த 22 பேரின் கதி என்ன? ஆகவே, அந்த விடயம் மீள் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

அத்தோடு மட்டக்களப்பில் இரண்டு நாளாக கௌரவ உறுப்பினர் கருணாகரம், கௌரவ கிருஸ்ணபிள்ளை, கௌரவ நடராசா, கௌரவ அமைச்சர் துரைராசசிங்கம் எல்லோருக்கும் தெரியும். கௌரவ அமைச்சரோடு நான் காலையில் பேசியிருந்தேன். இந்த மருந்தகத்தை இடமாற்றல் விடயத்தில் கடந்த இரண்டு வாரமாக மத்திய அரசாங்கத்தின் நிதி மட்டக்களப்பு சுகாதார அமைச்சிற்கு வந்து விட்டது. அவர்கள் அந்த இடத்தைக் Clinic Open செய்வதற்கான இடத்தைக் கேட்கின்றார்கள்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

හොඳයි වෙලාව සම්පන්ධයෙන් ප්‍රශ්නයක් තියෙනවා. පෙබරවරු 11 නැවත අපි රැස්වීම තියනවා. සභාව Adjourn කරන්න ඕන.

**கௌரவ உறுப்பினர் இ. துரைரெட்னம்**
**ගරු මන්ත්‍රී ආර්. තුරෙයිරත්නම් මැතිතුමා**
**Hon. Member R. Thurairatnam**

கௌரவ சுகாதார அமைச்சர் காலையில் பேசிய போது அந்த இடத்தைப் புதிதாக வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கூறியிருந்தார். அந்த விடயம் செய்யப்பட வேண்டும். கூறப்பட்ட விடயங்களில் மருந்தக விடயம் செய்யப்பட வேண்டும்.

நான் கூறிய விடயங்கள் முக்கியமாவை. ஆகவே, தயவுசெய்து இந்த நான்கு விடயங்களையும் கௌரவ அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
Hon.Chairman Chandradasa Galappaththi
ගරු ඇමතිතුමා, කෙටියෙන් උත්තර දෙන්න.

**கௌரவ அமைச்சர் ஏ.எல்.எம்.நசீர்**
**ගරු අමාත්‍ය ඒ. එල්. එම්. නසීර් මැතිතුමා**
**Hon. Minister A. L. M. Nazeer**

கௌரவ உறுப்பினர் மெத்தானந்த அவர்கள் அம்பாறைப் பிராந்திய பணிமனைகளுக்கு உட்பட்ட தெஹியத்தகண்டிய பிரதேச செயலகப் பிரிவில் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளதெனக் குறிப்பிட்டார். கௌரவ சுகாதார அமைச்சர் அம்பாறை பிராந்திய சுகாதாரப் பணிமனைக்கு விஜயம் செய்தபோது சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராய்ந்தபோதும், அம்பாறை பிராந்தியத்தில் மூன்று குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் மாத்திரம் இருக்கின்ற விடயம் உண்மையில் இருக்கின்றது. இருந்த போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று சிங்கள Midwife களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டு, அவர்கள் கிராணிலும் இன்னும் இரண்டு Station இலும் வேலை செய்கின்ற போது, அந்த மூன்று பேரையும் தற்போது அம்பாறையில் 3 மாத காலமாக தெஹியத்தகண்டிய, மகாஓயா என்ற இடத்திற்கு நாங்கள் அனுப்பியிருக் கின்றோம். இருந்த போதிலும் கல்முனைப் பிராந்தியத்தில் 26 பேர் மேலதிகமாக இருக்கின்றார்கள் என்று கூறியபோது, நான் உடனடியாக மாகாணத்தினுடைய பணிப்பாளருக்கு அறிக்கை இட்டபோது, இவ்வறிக்கையின் பிரகாரம் மாகாணத்தினுடைய பணிப்பாளர் எனக்குக் கூறியிருந்தார்.

கல்முனைப் பிராந்தியத்தில் இருக்கின்ற Midwife கிட்டத்தட்ட 44 பேர் 57 வயதிற்கு மேற்பட்டவர்கள். இன்று அல்லது நாளை Pension இல் போகின்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள். எங்களுடைய மாகாணத்தில் Midwife நியமனங்கள் வழங்குவதற்கு அல்லது பயிற்சி பெறுவதற்குரிய நிலையம் ஆரம்பித்த போதிலும், அதற்குரிய அனுமதியை மத்திய அரசு தரவேண்டும் என்ற விடயத்தை மாகாணத்தின் பணிப்பாளர் அவர்கள் கொழும்பிலுள்ள மத்திய சுகாதார அமைச்சிற்குச் சமர்ப்பித்திருக்கின்றார்கள். இருந்த போதிலும் கடந்த 24 ஆம் திகதி எங்களுடைய அமைச்சிலே மாகாணத்தினுடைய பணிப்பாளர் அவர்களும் அதேபோன்று பிராந்தியத்தின் பணிப்பாளர் அவர்களும் சுகாதார அமைச்சின் செயலாளர் அவர்களும் ஒன்று கூடி இந்தத் தீர்மானத்திற்கு வந்த போது, அதற்கு உடனடியாகத் தீர்வு கொடுக்க வேண்டும் என்று கோரி, இங்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற மூன்று சிங்கள Midwife ளையும் தெஹியத்தகண்டிய, மகாஓயா போன்ற பிரதேசங்களுக்கு அனுப்புவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்கின்றார்கள். கல்முனையில் இருக்கின்றவர்களை மட்டக்களப்பிற்கு இடமாற்றம் செய்து சமப்படுத்துவதற்குரிய விடயங்களை மேற்கொள்கின்றார்கள்.

எனவே, கௌரவ உறுப்பினர் மெத்தானந்த அவர்களை நேற்றுக்கூட மாகாணத்தின் பணிப்பாளரைச் சந்திக்க அனுப்பிய போது அதற்கும் தற்காலிகமாக மூன்று மாதம் இடமாற்றம் செய்வதற்குரிய ஏற்பாடுகளையும் செய்திருக்கின்றார்கள். இதற்குரிய நடவடிக்கைகள் 2.00 மணிக்கு அமைச்சினுடைய பணிப்பாளர்கள், உயர் அதிகாரிகள், வைத்தியர்கள் எல்லோரும் ஒன்று கூடி இதனைச் சமப்படுத்தித் தருகின்ற விடயத்தில் கவனம் செலுத்துகின்றேன். அதுமட்டுமல்ல, கௌரவ உறுப்பினர் மெத்தானந்த அவர்கள் ஒரு விடயத்தை முன்வைத்திருந்தார்கள். தீகவாபி வைத்தியசாலையினுடைய தாதியர்கள் இல்லாத நிலை இருக்கின்றது. ஆனால், எதிர்வரும் 04, 05 ஆம் திகதி நான் நினைக்கின்றேன், கிழக்கு மாகாணத்திற்கு தாதியர்கள் வருகின்றார்கள். அவர்கள் வருகின்ற போது, தீகவாபி வைத்தியசாலைக்கு உடனடியாகத் தாதியர்களும் Midwife ளும் அமைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு மாகாணத்தின் பணிப்பாளர்கள் செய்திருக்கின்றார்கள்.

இன்னுமொரு விடயத்தை கௌரவ உறுப்பினர் துரைரெட்னம் அவர்கள் முன்வைத்திருந்தார்கள். Midwife போன்று இல்லாது இருக்கின்ற குறைபாடுகளை செய்ய வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. ஆனால், மத்திய அரசு ஒரு விடயத்தை மேற்கொண்டு வருகின்றது. மத்திய அரசினுடைய அமைச்சில் இருக்கின்ற அமைச்சர்களும் அதேபோன்று, மத்திய அரசின் சுகாதார பணிப்பாளர் DG அவர்களும் சில விடயங்களை மேற்கொண்டு கடந்த 2016 ஆம் ஆண்டு Dr. மஹிப்பால அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்யவில்லை என்ற குறைபாடு இருந்த போதிலும், அந்த அறிக்கையின் பிரகாரம் எங்களுடைய மாகாணத்தின் Dr.பிரேம் அவர்கள் சில விடயங்களை எடுத்து மத்திய அரசிற்கு உரைத்த போது சில வைத்தியசாலைகள் ஏறாவூர், வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி போன்ற வைத்தியசாலைகளுக்கு நிதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், என்னுடைய பார்வையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சில வைத்தியசாலைகளுக்கு வழங்க வேண்டிய தேவைகள் இருக்கின்றன. அதனை இன்று 2.00 மணிக்கு ஒன்று கூடுகின்ற போது அதை சமப்படுத்துகின்ற விடயத்தில் கவனமாக இருக்கின்றேன். 2017 இல் கிழக்கு மாகாணத்தினுடைய நிதி ஒதுக்கீடு என்பது இந்தக் கிழக்கு மாகாணத்தினுடைய பிரச்சினைகளைப் பார்ப்பதற்கு மிகவும் கஸ்டமான நிலையில்தான் அமைச்சர்கள், அமைச்சினுடைய செயலாளர்கள், பணிப்பாளர்கள் எல்லோரும் முன்தள்ளப்பட்டிருக்கின்றார்கள். இருந்த

போதிலும் இந்த மாகாணத்தினுடைய சுகாதாரப் பிரச்சினைகளில் பாரிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசிற்கு இருக்கின்றது. நிதிகளைவிட வைத்தியர்கள் விடயத்தில் எங்களுக்குப் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. இப் பிரச்சினைகளை 2013 ஆம் ஆண்டு உரிய Cadre களை வைத்துக் கொண்டு 2017 இல் செய்ய வேண்டும் என்கின்ற விடயம் மிகவும் கஸ்டமான விடயமாக இருக்கின்றது. அதிலும் இன்று மட்டக்களப்பில் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை 514 மில்லியன் போன்ற நான்கு பிரிவுகள் திறந்து வைக்கப்பட்டு வைத்தியர்களும் தாதியர்களும் ஏனைய உத்தியோகத்தர்களும் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. கௌரவ முதலமைச்சர் உட்பட கௌரவ தவிசாளர், கௌரவ அமைச்சர்கள் ஒன்றிணைந்து மிக விரைவில் இந்தக் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணிவாகக் கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

හොඳයි ගරු ඇමතිතුමා, බොහෝම ස්තූතියි!... එම්.එස්.උදුමාලෙබ්බේ ගරු මන්ත්‍රීතුමා න්‍යාය පත්‍රයේ 4(17) ඔබතුමාගේ යෝජනාව. ඉදිරිපත් කිරීම් පමණයි කරන්නේ.

**கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை**
**ගරු විපක්ෂනායක එම්.එස්. උදුමාලෙබ්බේ මැතිතුමා**
**Hon. Opposition leader M.S. Udumalebbe**

***கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்கான விசேட பொறிமுறை ஒன்றினை உருவாக்குமாறு கோரும் தனிநபர் பிரேரணை.***

*கிழக்கு மாகாணத்தில் ஆண்டு தோறும் அதிகமான பட்டதாரிகள் பல்கலைக்கழகங்களில் இருந்து பட்டம் பெற்று வெளியேறுகின்றமையினால் கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.*

*கடந்த அரசாங்கத்தினால் 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் பட்டம் பெற்ற ஐம்பதாயிரம் (50,000) பட்டதாரிகள், 2013.01.12 ஆம் திகதி அரச சேவைக்கு நிரந்தரமாக உள்ளீர்ப்புச் செய்யப்பட்டனர்.*

*புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் 2011.03.31 ஆம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்றவர்களுக்கு மாத்திரம் 2016.01.12 ஆம் திகதி பட்டதாரி பயிலுனராக உள்ளீர்ப்புச் செய்துள்ளது. ஆனால், தற்போது 2012.04.01 ஆம் திகதியிலிருந்து இன்று வரை பட்டம் பெற்றவர்கள் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய 03 மாவட்டங்கள் உள்ளடங்கலாக சுமார் 7500 வேலையற்ற பட்டதாரிகள் கடந்த 06 வருடங்களாக அரச நியமனத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.*

*எனவே, வேலையற்ற பட்டதாரிகளின் விடயம் இன்று கிழக்கு மாகாணத்தில் ஒரு சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அவர்கள் உடல், உள ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்க்கை தினமும் கண்ணீரில் கரைவதை எம்மால் உணர முடிகின்றது. அப்பட்டதாரிகளில் பல குடும்பங்கள் தங்கி வாழ்கின்றன. எனவே, மக்கள் பிரதிநிதிகளான நாம் மிகுந்த கரிசனையோடு அவதானம் செலுத்தி சகல பட்டதாரிகளுக்கும் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.*

*எனவே, விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டு மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் நியமனங்களின் கிழக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு அதி கௌரவ ஜனாதிபதி திரு.மைத்திரிபால சிறிசேனா அவர்களையும், கௌரவ பிரதம மந்திரி திரு.ரணில் விக்கிரமசிங்க அவர்களையும் கோருவதுடன், கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்படும் நியமனங்களில் கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்குவதற்கான விசேட பொறிமுறை ஒன்றினை உருவாக்குமாறு கோரும் தனிநபர் பிரேரணையை கிழக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கின்றேன்.*

**கௌரவ உறுப்பினர் மு.இராஜேஸ்வரன்**
**ගරු මන්ත්‍රී එම්. රාජෙස්වරන් මැතිතුමා**
**Hon. Member M. Rajeswaran**

நான் அதனை வழிமொழிகின்றேன்.

**கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை**
**ගරු විපක්ෂනායක එම්.එස්. උදුමාලෙබ්බේ මැතිතුමා**
**Hon. Opposition leader M.S. Udumalebbe**

கௌரவ தவிசாளர் அவர்களே! பட்டதாரி நியமனங்கள் வழங்குகின்ற போது அவர்களது பட்டம் பெற்ற ஆண்டினையும் வயதினையும் அடிப்படையாகக் கொண்டு நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். உதாரணத்திற்கு நான் கூறுகின்றேன். அண்மையில் தமிழ் மொழி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் கோரப்பட்டிருக் கின்றன. அதில் அவர்களுடைய வயதெல்லை 18-45 வயதிற்கும் இடைப்பட்டதாக குறிக்கப்பட்டிருக்கின்றது. உண்மையில் அவர் பட்டத்தைப் பெற்று 45 வயது வரும் வரையில் 45 க்குப் பின்பு அவர் எந்தவிதமான பதவியையும் பெறமுடியாது. பல்கலைக்கழகம் சென்று பட்டத்தையும் பெற்று 45 வயது ஆகும் போது சமூகத்தில் பல்கலைக்கழகம் செல்கின்றவர்களுக்கு மரியாதை இல்லாத நிலைமை ஏற்படப் போகின்றது. 45 வயதிற்குப் பின்பும் அவர்களுக்குத் தொழில் இல்லை. எனவே, நாங்கள் முதலில் நமது பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றவர்களுடைய வயதெல்லையை இந்தச் சபை 45 வயதாக அதிகரிக்க வேண்டிய பாரிய பொறுப்பு இருக்கின்றது. ஒரே மாகாணத்தில், ஒரே நாட்டில் தமிழ் மொழி மூல ஆசிரியருக்கு ஊவா மாகாணத்தில் 45 வயது கோரப்படுகின்ற போது, நாங்கள் 40 ஆக மாற்றி வைத்திருக்கின்றோம். அதனால், 45 வயதாக அதிகரிக்க வேண்டிய சூழல் இருக்கின்றது.

அடுத்ததாக கல்விக் கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர்களுக்கும், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கும் ஒரு நேர்முகப் பரீட்சை வைத்து அப் பரீட்சை மூலம் பதவிகளைக் கொடுக்கின்றோம். ஆனால், நான்கு ஆண்டு காலம் பல்கலைக்கழகம் படித்து பட்டம் பெற்றவர்களுக்கு உண்மையில் கடந்த காலத்தில் நேர்முகப் பரீட்சை ஊடாகத்தான் நியமனங்கள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை வைப்பது மாத்திரம்தான் முக்கியம். ஆனால், பரீட்சை எழுதுகின்ற முறையினால் அவர்களுடைய பட்டங்களும் எதிர்காலமும் பாதிக்கப்படுகின்ற நிலைமை கிழக்கு

மாகாணத்தில் இருக்கின்றது. இது முக்கியமான பிரச்சினையாகும்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

ගරු මන්ත්‍රීතුමා, මන්ත්‍රීවරු ඔක්කොම දන්නවා, ඔබතුමා කියන ටික.

**கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை**
**ගරු විපක්‍ෂනායක එම්.එස්. උදුමාලෙබ්බේ මැතිතුමා**
**Hon. Opposition leader M.S. Udumalebbe**

அடுத்ததாக பட்டதாரிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற போது அரசாங்க சேவையில் ஏற்கனவே பதவியில் இருப்பவர்களுக்குக் கோரப்படு கின்ற தேவை இருக்கின்றது. அரச சேவையில் ஏற்கனவே நியமனம் பெற்றிருக்கின்ற பட்டதாரிகளை பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கின்ற போது அநியாயமாக இருக்கின்றது. ஏனென்றால், வேலையற்ற பட்டதாரிகள் அதிகம் இருக்கின்றார்கள். இது எல்லோருக்கும் உரிய கூட்டு முயற்சியாகும். சமூகத்திலும் குடும்பத்திலும் அவர்களுக்கு அந்தஸ்து இல்லை. எனவே இந்தப் பிரச்சினைக்கு மத்திய அரசாங்கம் அழுத்தங்களைக் கொடுத்து, மத்திய அமைச்சினை வற்புறுத்தி பொதுவான திட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் வேலையற்று இருக்கின்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான ஏற்பாட்டை கௌரவ முதலமைச்சர் செய்ய வேண்டும். இல்லையென்றால் பல்கலைக்கழகம் செல்கின்ற மாணவர்களுடைய தொகையை இல்லாமல் செய்து, பல்கலைக்கழகம் செல்கின்ற சம்பிரதாயமே இல்லாத அபாயமான சூழ்நிலை முழுக் கிழக்கு மாகாணத்துக்கும் வந்திருக்கின்றது.

இன்று இவர்களுக்குத் தொழில் வழங்க வேண்டிய போராட்டங்களை அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் அவர்கள் பாரிய ஆர்ப்பாட்டங்களை நடாத்தியிருக்கின்றார்கள். குடும்பச் சுமைகள், திருமணம் முடித்தவர்கள், தொழில் இல்லாதவர்கள் இருக்கின்றார்கள். ஒரு உதாரணத்தை மாத்திரம் கூறுகின்றேன். ஒரு குடும்பத்தில் 44 வயதைச் சேர்ந்த பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர் இருக்கின்றார். ஆனால், அவருடைய இரண்டாவது தம்பி A/L Pass பண்ணி பெரும் பதவியைப் பெற்றுக் குடும்பப் பொறுப்புகளைத் தங்கைக்கு வீடு கட்டி சந்தோசமாக இருக்கின்றார். ஆனால், குடும்பத்தில் பல்கலைக்கழகம் சென்ற அந்த அண்ணனை மதிக்கின்றார்களில்லை. ஏனென்றால், பல்கலைக்கழகம் சென்று எந்தப் பலனும் இல்லை என்ற நிலைமையில் மானசீக முறையில் தாக்கப்படுகின்றார்கள். எனவே, இது சம்பந்தமாகக் கௌரவ முதலமைச்சர் அவசர ஏற்பாடுகளைச் செய்து கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

හොඳයි, බොහොම ස්තූතියි!... දැන් අපි ගරු මහ ඇමතිතුමාට උත්තර දෙන්න කියමු.

**கௌரவ உறுப்பினர் இ. துரைரெட்னம்**
**ගරු මන්ත්‍රී ආර්. තුරෙයිරත්නම් මැතිතුමා**
**Hon. Member R. Thurairatnam**

பட்டதாரி நியமனம் தொடர்பாகப் பல விடயம் எல்லோரும் பேச வேண்டிய நிலைமை இருக்கின்றது. மாலை பேசுவதென்றால் அதற்கு நேரமில்லை.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

එහෙනම් සාකච්ඡාව ලබන සභාවට කල්තියමු.

**கௌரவ உறுப்பினர் இ. துரைரெட்னம்**
**ගරු මන්ත්‍රී ආර්. තුරෙයිරත්නම් මැතිතුමා**
**Hon. Member R. Thurairatnam**

இதிலே நீங்கள் தெளிவாக முடிவு எடுக்க வேண்டும். மாலையில் பேசலாம்தானே. கௌரவ முதலமைச்சர் அவர்களே! பட்டதாரி நியமனம் தொடர்பாக எல்லா மாவட்டங்களும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கின்றார். அதற்கு சரியான முடிவை எடுக்க வேண்டும். இது முடிந்தவுடன் கூட்டத்தில் ஆராய இருப்பதால் நாங்கள் பேசவில்லை. அதில் பேசுவதென்றால் இதில் தேவையில்லை.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

මේ පිළිබඳව අද සාකච්ජාවක් තියෙනවා නේ. ඔබතුමා උත්තරයක් දෙන්න.

**கௌரவ முதலமைச்சர் ஏ. நசீர் அகமட்**
**ගරු ප්‍රධාන අමාත්‍ය ඒ. නසීර් අහමඩ් මැතිතුමා**
**Hon. Chief Minister A. Nazeer Ahamed**

கௌரவ தவிசாளர் அவர்களே! கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய வேலையில்லாப் பட்டதாரிகள் சம்பந்தமாகப் பல முறை இதற்குப் பல கோணங்களில் எல்லா கௌரவ உறுப்பினர்களும் இது சம்பந்தமாகப் பேசியிருக்கின்றோம். அதற்கான நடவடிக்கையும் இன்று எடுத்து வருகின்றோம். அண்மையில் ஒட்டுமொத்தமாக இதில் சரியான தகவல்கள் இல்லாத பிரச்சினை இருக்கின்றது. ஏறத்தாழ எங்களுடைய கணிப்பீட்டின்படி 5000 த்திற்கு உட்பட்ட பட்டதாரிகள் இந்தக் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்றதாகவும், அவற்றை எல்லோரும் தொகுத்துத் தரும்படி கடந்த இரண்டு கிழமைக்கு முன்பு ஒவ்வொரு மாவட்டத்திலும் பட்டதாரிகள் அமைப்பை உருவாக்கி, அவர்களுடைய பிரதிநிதிகளைக் கொடுத்துத் தரும்படி நாங்கள் கோரி நிற்கின்றோம். அதற்குரிய நடவடிக்கை ஒரு புறம் சென்று கொண்டிருக்கின்றது. இரண்டாவது நடவடிக்கையாக மாகாணத்தில் இருக்கின்ற ஒட்டு மொத்தமான எல்லா வெற்றிடங்களையும் நிரப்பு வதற்கான நடவடிக்கையும் நாங்கள் எடுத்து வருகின்றோம். அதில் எங்களுக்கு நடைமுறைச் சிக்கல் இல்லாமல் இல்லை. PPSC இல் பிரச்சினைகள் இருக்கின்றன. வயதைக் குறைப்பதில் கௌரவ ஆளுநருடைய அனுமதி என்கின்ற விடயத்தில் பிரச்சினை இருக்கின்றது.

ஆகவே, அவற்றை எல்லாம் தாண்டி ஒவ்வொரு விடயமாக உடைத்துக் கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதற்கு வேண்டுமென்றால் சபை அங்கீகாரம் தருமாக இருந்தால் இதில் ஒரு Committee ஐ உடனடியாகப் போட்டு, இருக்கின்ற சிறிய சிறிய விடயங்ளை இவ்வாறு மற்ற மாகாணங்களில் நடக்கின்றது என்பது சம்பந்தமாக... சில மாகாணங்களில் 40, 45 வயதாக மாற்றுவது. பரீட்சை இல்லாமல் தெரிவு செய்யப்படுகின்ற விடயங்கள் ஒரு சில இடங்களில் புள்ளிகள் குறைக்கப்பட்டு உள்வாங்கப்படுகின்ற விடயங்கள் இவற்றை எல்லாம் ஆவணப்படுத்தித் தருவதற்காக இந்தச் சபையில் இரண்டு, மூன்று உறுப்பினர்களை எங்களுக்கு உடனடியாக... நான் வேண்டுமானால் Nominate பண்ணலாம். அதை மாகாண சபையில் எல்லோரும் அங்கீகரிக்க முடியுமாக இருந்தால்...

**கௌரவ உறுப்பினர் கோ.கருணாகரம்**
**ගරු මන්ත්‍රී ජී. කරුණාකරම් මැතිතුමා**
**Hon. Member G. Karunakaram**

Hon.Chairman, sorry to interrupt you. இந்தக் Council முடிந்தவுடன் Meeting இருக்கின்றது. அதற்கு கௌரவ முதலமைச்சர் வருவார் தானே?

**கௌரவ முதலமைச்சர் ஏ. நசீர் அகமட்**
**ගරු ප්‍රධාන අමාත්‍ය ඒ. නසීර් අහමඩ් මැතිතුමා**
**Hon. Chief Minister A. Nazeer Ahamed**

வருவேன். இன்ஷாஅல்லாஹ், அதில் நாங்கள் நடவடிக்கையை எடுப்போம்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

Committee එකක් පත් කරනවා නම් ඔබතුමාගේ ප්‍රධානත්වයෙන් විපක්ෂ නායකතුමා සියලුම පක්ෂ නායකවරුන්ගේ ප්‍රධානත්වයෙන් සකස් කරමු.

**கௌரவ உறுப்பினர் இ. துரைரெட்னம்**
**ගරු මන්ත්‍රී ආර්. තුරෙයිරත්නම් මැතිතුමා**
**Hon. Member R. Thurairatnam**

அந்தக் குழுவில் PPSC Secretary, Chief Secretary, Education Secretary ஆகிய மூன்று பேரும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பலன் இல்லை.

**கௌரவ முதலமைச்சர் ஏ. நசீர் அகமட்**
**ගරු ප්‍රධාන අමාත්‍ය ඒ. නසීර් අහමඩ් මැතිතුමා**
**Hon. Chief Minister A. Nazeer Ahamed**

கட்டாயம் இருக்க வேண்டும். அதை நாங்கள் 11.00 மணிக்கு Decide பண்ணுவோம்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

හොඳයි බොහොම ස්තූතියි!... න්‍යාය පත්‍රයේ 4(18) යටතේ ගරු නඩරාජා මන්ත්‍රීතුමාගේ යෝජනාව. ඒ යෝජනාව සම්බන්ධයෙන් කතා කරන්න ගරු සෞඛ්‍ය ඇමතිතුමා සභාවේ නැහැ. ඒක නිසා අපි මේක ඊළඟ සභාරැස්වීමට ගමු.

**கௌரவ உறுப்பினர் மா.நடராசா**
**ගරු මන්ත්‍රී එම්. නඩරාජා මැතිතුමා**
**Hon. Member M. Nadarajah**

கௌரவ சபாநாயகர் அவர்களே! உண்மையில் நாங்கள் பிரேரணைகளை ஒரு தேவை கருதித்தான் சபையில் சமர்ப்பிக்கிறோம். ஆனால், இவ்வாறாக இந்தப் பிரேரணைகள் அடுத்த மாதம், அதற்கு அடுத்த மாதம் மந்திரி இல்லை என்ற காரணங்களைக் காட்டி அதனைப் பிற்போடுவதென்றால் இந்தப் பிரேரணை போட வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், அந்த மந்திரிமார்களுக்கு ஏற்கனவே Agenda அறிவித்திருக்கின்றீர்கள். ஒரு மாதத்திற்கு ஒருமுறை தான் இந்தச் சபை கூடப்படுகின்றது.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

මේ න්‍යාය පත්‍රය ඔක්කෝටම ගිහින් තියෙනවා.

**கௌரவ உறுப்பினர் மா.நடராசா**
**ගරු මන්ත්‍රී එම්. නඩරාජා මැතිතුමා**
**Hon. Member M. Nadarajah**

மக்களுடைய பிரச்சினை சம்பந்தமாக நாங்கள் இந்தச் சபையில் ஒரு மாதத்தில் ஒரு தடவை பேசுவதற்குக் கூட அனுமதி இல்லை என்றால் இந்தச் சபை நடாத்த வேண்டிய அவசியம் இல்லை. அதற்காக இந்த மந்திரி சபையில் மந்திரிமார் பிரசங்கத்தை கட்டாயம் கொடுக்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. நாங்கள் ஒவ்வொரு மாதமும் அவர்கள் இல்லை என்பதற்காக ஒத்திப் போடுவதைத் தடுக்க வேண்டும். ஏனென்றால், மக்களின் பிரச்சினை உடனடியாகத் தீர்வு காண வேண்டியதன் அடிப்படையில் அதுவும் நாங்கள் ஒரு மாதத்திற்குப் பிற்பாடு, மாதத்திற்கு ஒரு தடவைதான் இந்த சபையில் இதைப் பேச எடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, இது விடயமாகக் கௌரவ சபாநாயகர் அவர்களே! மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடைமுறைகளை எதிர்காலத்தில்... முக்கியமாக இதில் நான் குறிப்பிட வேண்டிய விடயம். தற்பொழுது நடந்த Annual Transfers ஒவ்வொரு வருட ஆரம்பத்தில் நடக்கின்ற இடமாற்றம் சம்பந்தமான பிரச்சினை. அடுத்த மாதம் மூன்றாம் மாதம், ஒரு வருடத்தின் கால் வருடம் முடிந்து விடுகின்றது. அதன் பிற்பாடு ஆராய்வது என்பது தேவையற்ற விடயமாகத்தான் நான் கருதுகின்றேன்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
**Hon.Chairman Chandradasa Galappaththi**

දැන් මට උත්තර දෙන්න බැහැ නේ. ඇමතිතුමා නැතිනම්, මට කරන්න දෙයක් නැහැ. න්‍යාය පත්‍රයේ 4(7) යටතේ ගරු ආර්.එම්. අන්වර් මැතිතුමා. අපි දීර්ඝව විවාදයකට යන්නේ නැහැ. ඔබතුමාගේ කාරණය ඉදිරිපත් කරන්න. උත්තර දෙන්න වුවමනා කරන ඇමතිවරයා, මේ පිළිබඳව උත්තර දෙයි.

**கௌரவ உறுப்பினர் ஆர்.எம். அன்வர்**
**ගරු මන්ත්‍රී ආර්.එම්. අන්වර් මැතිතුමා**
**Hon. Member R. M. Anwar**

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம். *இலங்கையிலுள்ள பெண்கள் பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். பலர் இனம் புரியாத மரணத்தையும் எதிர் கொள்கின்றனர். அதுமட்டுமன்றி மிக மோசமாகவும் நடாத்தப்படுகின்றனர். தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பல இலங்கைத் தூதரகங்களில் பெண்கள் மர்மமாக கொல்லப்படுகின்ற சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.*

*எனவே, இந்த கௌரவமான சபையினூடாக இலங்கை நாட்டில் இருந்து பணிப்பெண்களாகச் செல்லும் பெண்களை தடுத்து நிறுத்தும்படி எமது மாகாண சபையினூடாக அதிமேதகு ஜனாதிபதி மற்றும் பிரதமரை வேண்டி நிற்றல்.*

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
Hon.Chairman Chandradasa Galappaththi
හොඳයි, ඒ යෝජනාව ස්ථිර කරන්න.

**கௌரவ உறுப்பினர் ஜயந்த விஜேசேகர**
**ගරු මන්ත්‍රී ජයන්ත විජේසේකර මැතිතුමා**
Hon. Member Jayantha Wijesekara
ඒ යෝජනාව මම ස්ථිර කරනවා.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
Hon.Chairman Chandradasa Galappaththi
හොඳයි ඔබතුමා කෙටියෙන් මේ කාරණය කියවනකොට අවබෝධ වෙනවා. කෙටියෙන් කතාකරන්න. තවත් රැස්වීමක් තියෙනවා.

**கௌரவ உறுப்பினர் ஆர்.எம். அன்வர்**
**ගරු මන්ත්‍රී ආර්.එම්. අන්වර් මැතිතුමා**
Hon. Member R. M. Anwar
கௌரவ முதலமைச்சரின் கவனத்திற்கு, මහ ඇමතිතුමාගේ අවධානයට යොමු කරනවා මේක. கௌரவ முதலமைச்சர் அவர்களே! இந்தக் கருத்தில் நான் நினைக்கின்றேன், என்னைவிட அதிகூடிய கவனம் உள்ளவர். இலங்கையில் உள்ள பெண்கள் பணிப்பெண்களாக செல்வது சம்பந்தமாகக் குறிப்பாக இலங்கை நாட்டில் அதிகமான பெண்கள் துஸ்பிரயோகத்திற்கும் அதேபோன்று, கற்பழித்தும் மரணத்தை எதிர்கொள்கின்ற சம்பவங்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லுகின்ற பெண்களுக்கு அதிகம் காணப்படுகின்றது. அதில் குறிப்பாக அண்மையில் மூவினத்தைச் சார்ந்த மக்களும் துஸ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக் கின்றார்கள். சிங்கள, தமிழ், முஸ்லிம் மூவினப் பெண்களும் கொல்லப்பட்ட வரலாறு இருக்கின்றது. சில சிறிய தண்டனைகளுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்க்கை அழிக்கப்பட்ட வரலாறும் பணிப் பெண்களாகச் செல்பவர்களிடத்திலே இருக்கின்றது.

எனவே, கௌரவ சபாநாயகர் அவர்களே! இதிலே ஒரு திடமான முடிவைப் பெற்று குறிப்பாக அண்மையில் பார்தோமானால்... மத்திய கிழக்கிற்கு அனுப்பப்படுகின்ற... அண்மையில் அவ்வாறு சென்ற இளம் பெண்ணை வேறு நாட்டவர் கற்பழித்துக் கொலை செய்து போடப்பட்டிருந்த புகைப்படங்களைப் பத்திரிகையில் பார்க்க முடியுமாக இருந்தது. அதேபோன்று, அண்மையில் சிங்களப் பெண் ஒருவர் மூன்றாவது மாடியில் இருந்து தள்ளப்பட்டு இறந்த சம்பவம் இருக்கின்றது. அதேபோன்று, இன்னொரு தமிழ் சமூகத்தைச் சார்ந்த ஒரு குடும்பப் பெண் ஒருவரும் மாடியில் இருந்து தள்ளப்பட்டு கொலை செய்யப்பட்ட வரலாறுகளும் இவ்வாறு அதிகமான துஸ்பிரயோகங்களும் இடம்பெறுகின்றன. எனவே, எங்களுடைய நாட்டில் இருக்கின்ற பெண்கள் கௌரவமாக மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுள் குடும்பத்திலே நுழையாத இளம் பெண்களும் உள்ளனர். அவற்றை கௌரவ முதலமைச்சர் அவர்கள் மாகாண சபை ஊடாக ஏகமனதாக பிரேரணை ஒன்றை நிறைவேற்றி அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதமருக்கும் அனுப்புவதன் ஊடாக அதனைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனக் கேட்டு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
Hon.Chairman Chandradasa Galappaththi
හොඳයි. එහෙනම් මහ ඇමතිතුමා උත්තර දෙන්න කියමු. මහ ඇමතිතුමා....

**கௌரவ முதலமைச்சர் ஏ. நசீர் அகமட்**
**ගරු ප්‍රධාන අමාත්‍ය ඒ. නසීර් අහමඩ් මැතිතුමා**
Hon. Chief Minister A. Nazeer Ahamed
கௌரவ தவிசாளர் அவர்களே! கௌரவ உறுப்பினர் அன்வர் அவர்களுடைய இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் பல இடங்களிலே பேசியிருக்கின்றோம். எல்லா கௌரவ உறுப்பினர்களும் இந்த நிலைப்பாட்டில் இருக்கின்ற ஒரு விடயத்தை இவ்விடத்தில் தெரிவித்துக் கொண்டு, இதற்கு முக்கிய காரணம் தொழில் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டிய ஒரு தேவை மாகாணத்திலே இருக்கின்றது. அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி அவர்களால் இதை எந்த அளவு தடை செய்ய முடியும் என்ற கேள்வி எங்களுக்குள் இருக்கின்றது. ஏனென்று கூறினால், இந்த விடயத்தைத்தான் இந்த நாடே Foreign Exchange ஆக... இன்று வெளிநாட்டு வருமானத்தை அதிகம் பெறுகின்ற விடயமாக... இந்த நாடு இதில் தங்கியிருக்கின்ற வேளையில் மத்திய அரசு இதற்குரிய நடவடிக்கையை ஒரு போதும் எடுக்கப்போவதில்லை என்ற விடயத்தை நாங்கள் தெளிவாகத் தெரிந்திருக்கின்றோம். ஆனால், ஆகக் குறைந்தது மாகாணத்திலே இதனை நிறுத்துவதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு பல கிராமிய அபிவிருத்தித் திட்டங்களையும் கிராமியத் தொழிற்சாலைகளையும் உருவாக்க வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கின்றது. கடந்த 30 வருடமாக எங்களுடைய மாகாணத்திலே எந்தவித பாரிய முதலீடுகளும் இடம் பெறாத ஒரு நிலையிலே பாரிய சிறு கைத்தொழில் பேட்டைகள், கைத்தொழில் விடயங்கள் எல்லாம் அழிக்கப்பட்டிருக்கின்றன. மாகாணத்தில் இருந்து அத்தனை தொழிற்சாலைகளும் இன்று எந்தவொரு தொழிற்சாலையும் இல்லாத மாகாணமாக இருக்கின்றது. ஆகவே, அவற்றை

உருவாக்குவதற்கான நடவடிக்கையை நாங்கள் ஒரு புறம் எடுக்கின்ற அதேநேரத்தில் முதலீடுகளை ஊக்குவிக்கின்ற மாகாணமாக எங்களுக்கு இன்னும் அரச நிறுவனங்களில் இருந்து பல... அதாவது இதை Red Tape என்று கூறுகின்ற விடயம் இன்னும் மாகாணத்தில் இருந்து கொண்டிருக்கின்றது.

அவற்றை எல்லாம் தகர்த்து இந்த தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதனை உடனடியாக அமுல்படுத்து வதற்கு எல்லா அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டிய தேவை இருக்கின்றது.
ஆகவே, அவற்றையும் நாங்கள் செயற்படுத்துவது மாத்திரம் அல்ல, முதலீடுகளைக் கொண்டு வருகின்ற போது இங்கு எத்தனையோ முதலீட்டாளர்கள் இந்த மாகாணத்திற்கு வந்து சரியான முறையில் மாகாணத்தில் இருக்கின்ற குறிப்பாக Divisional Secretary அதாவது DS மார் சரியான ஒத்துழைப்பு வழங்காததன் காரணத்தினால், இன்று எத்தனையோ முதலீட்டாளர்கள் திரும்பிச் சென்றிருக்கின்றார்கள். அவர்களை அலைக்களிப்பது, முதலீட்டாளர் வருகின்ற போது அந்த முதலீட்டை அமுல்படுத்துதற்கு அவர்களை ஊக்குவிப்பதற்குப் பதிலாக நடைமுறையில் பலர் தங்களுடைய சுயநலத்திற்காக அதனை முடக்குகின்ற ஒரு செயற்பாட்டிலே பிரதேச செயலாளர்கள் அதிகமானவர்கள் இருக்கின்றார்கள். என்னுடைய அனுபவத்தில் நான் கூறுகின்றேன். ஆகவே, அவற்றை எல்லாம் நாங்கள் தகர்த்தெறிந்து மாகாணத்தில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இது ஒரு நல்ல விடயம். எல்லோருமாகச் சேர்ந்து இதனை நிறுத்த முடியுமாக இருந்தால், இந்த மாகாணத்திற்குச் செய்கின்ற பாரிய கைங்கரியம் அமையும் என்று கூறி கௌரவ அன்வர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
Hon.Chairman Chandradasa Galappaththi
සභාව කල් තැබීමෙන් පසුව උපාධිධාරී ගුරුවරුන් පිළිබඳව ගියමාසේ රැස්වීමේදී සාකච්ඡා කරපු කාරණය සම්බන්ධයෙන් සාකච්ඡාවක් ඉහළ මාළයේ රැස්වීම් ශාලාවේ පැවැත්වෙනවා, ඒ වෙනුවෙන් අධ්‍යාපන අමාත්‍යාංශයේ ලේකම්, ඒ වගේම රාජ්‍ය සේවා කොමිෂන් සභාවේ ලේකම්තුමන් සහ ප්‍රධාන ලේකම්තුමාව අද ඒ සභා රැස්වීමට පැමිණෙන්න කියලා, අපි දැනුවත් කරලා තියෙනවා. ඒ රැස්වීම පැවැත්වෙනවා මින් අනතුරුව.

ඒ එක්කම මාණික්කමඩු ප්‍රශ්නය පිළිබඳව අපේ මන්ත්‍රීතුමා මේ සභාවේ ප්‍රකාශයක් කළා. ඒ කාරණය පිළිබඳව දැන් අපි ඉඩම් කොමසාරිස්වරයා කැඳවලා තියෙනවා. මහ ඇමතිතුමත් මේ පිළිබඳව කතා කරලා. සභාව කල්තැබීමෙන් පසුව අද මේ ස්ථානයේද මේ ප්‍රශ්නය පිළිබඳව සාකච්ඡා කරන්න බලාපොරොත්තු වෙනවා. ඒ එක්කම අපි හවස 3.00ට....

**கௌரவ அமைச்சர் சி. தண்டாயுதபாணி**
**ගරු අමාත්‍ය එස්. තන්ඩායුදපානි මැතිතුමා**
Hon. Minister S. Thandayuthapani
மன்னிக்கவும், எங்களுடைய கல்வி அமைச்சினுடைய ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெறவிருப்பதாக...

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
Hon.Chairman Chandradasa Galappaththi
ඔව් මම කියන්න යන්නේ. நான் கூறுவதற்குத்தான் இருக்கின்றேன்... கொஞ்சம் இருங்கள்...

**கௌரவ அமைச்சர் சி. தண்டாயுதபாணி**
**ගරු අමාත්‍ය එස්. තන්ඩායුදපානි මැතිතුමා**
Hon. Minister S. Thandayuthapani
ஆட்கள் வர வேண்டுமே, ஆட்கள் வராமல் யாருக்கு நடாத்துவது.

**கௌரவ சபைத் தலைவர் சந்திரதாச கலப்பத்தி**
**ගරු සභාපති චන්ද්‍රදාස ගලප්පත්ති මැතිතුමා**
Hon.Chairman Chandradasa Galappaththi
கொஞ்சம் இருங்கள், நான் கூறுகின்றேன். අද හවස අධ්‍යාපන පිළිබඳ උපදේශක කාරක සභාව හවස 3.00ට මෙම ගොඩනැගිල්ලේ පළාත් සභාවේ ඉහළ මාළයේ පැවැත්වෙනවා. පෙත්සම් කාරක සභාව අද රැස්වෙන්නේ නැහැ. ඒ නිසා අද සභාවේ කටයුතු අවසන් කරනවා.

ඒ එක්කම මීළඟ සභා රැස්වීම මාර්තු මාසේ 21වෙනිදා පෙරවරු 9.30ට ආරම්භ කරනවා. න්‍යාය පත්‍රය තමුන්නාන්සේලාට යථාකාලයේදී ලැබෙන්න ක්‍රියා කරනවා. එහෙනම් සියලුදෙනාටම බොහොම ස්තූතියි!...

**11.00am**
**Council is adjourned.**

தொகுதி 05 இல 11
05 වැනි වෙළුම 11 වැනි කලාපය
Volume: 05 No 11

2017 பெப்ரவரி 22 புதன்கிழமை
2017 පෙබරවාරි 22 වැනි බදාදා
2017 February 22 Wednesday

கிழக்கு மாகாண சபை
නැගෙනහිර පළාත් සභාව
Eastern Provincial Council

# 2017 பெப்ரவரி 21 செவ்வாய்க்கிழமை
# 2017 ජනවාරි 21 වැනි අඟහරුවාදා

**சமூகமளித்தோர் :**

1) கௌரவ சபைத் தலைவர் சீ. கலப்பத்தி
2) கௌரவ பிரதி தவிசாளர் நி. இந்திரகுமார்
3) கௌரவ முதலமைச்சர் நசீர் அகமட்
4) கௌரவ அமைச்சர் கி. துரைராஜசிங்கம்
5) கௌரவ அமைச்சர் ஏ.எல்.எம்.நசீர்
6) கௌரவ உறுப்பினர் இ. துரைரெத்தினம்
7) கௌரவ உறுப்பினர் ஞா. கிருஸ்ணபிள்ளை
8) கௌரவ உறுப்பினர் ஆர்.எம். அன்வர்
9) கௌரவ உறுப்பினர் டீ.டீ.மெத்தானந்த த சில்வா
10) கௌரவ உறுப்பினர் த. கலையரசன்
11) கௌரவ உறுப்பினர் மு.இராஜேஸ்வரன்
12) கௌரவ உறுப்பினர் கு. நாகேஸ்வரன்
13) கௌரவ உறுப்பினர் மா.நடராசா
14) கௌரவ உறுப்பினர் கோ.கருணாகரம்
15) கௌரவ உறுப்பினர் ஜெ. ஜெனார்த்தனன்
16) கௌரவ உறுப்பினர் ஆரிப் சம்சுதீன்
17) கௌரவ உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை
18) கௌரவ உறுப்பினர் ஜயந்த விஜேசேகர
19) கௌரவ உறுப்பினர் பீ.எல்.அருண சிறிசேன
20) கௌரவ உறுப்பினர் அப்துல் ரசாக்
21) கௌரவ உறுப்பினர் ரி.எம்.ஜயசேன
22) கௌரவ உறுப்பினர் கே.பி.பி. பிறேமகுமார
23) கௌரவ அமைச்சர் சி. தண்டாயுதபாணி

**පැමිණිම :**

1) ගරු සභාපති සී. ගලප්පත්ති මැතිතුමා
2) ගරු මන්ත්‍රී එන්. ඉන්ද්‍රකුමාර් මැතිතුමා
3) ගරු ප්‍රධාන අමාත්‍ය නසීර් අහමඩ් මැතිතුමා
4) ගරු අමාත්‍ය කේ. තුරෙයිරාසසිංගම් මැතිතුමා
5) ගරු අමාත්‍ය ඒ. එල්. එම්. නසීර් මැතිතුමා
6) ගරු මන්ත්‍රී ආර්. තුරෙයිරත්නම් මැතිතුමා
7) ගරු මන්ත්‍රී ජී. කිරුෂ්ණපිල්ලෙයි මැතිතුමා
8) ගරු මන්ත්‍රී ආර්.එම්. අන්වර් මැතිතුමා
9) ගරු මන්ත්‍රී ඩී.ඩී.මෙත්තානන්ද ද සිල්වා මැතිතුමා
10) ගරු මන්ත්‍රී ටී. කලෙයිඅරසන් මැතිතුමා
11) ගරු මන්ත්‍රී එම්. රාජෙස්වරන් මැතිතුමා
12) ගරු මන්ත්‍රී කේ. නාගේස්වරන් මැතිතුමා
13) ගරු මන්ත්‍රී එම්. නඩරාජා මැතිතුමා
14) ගරු මන්ත්‍රී ජී. කරුණාකරම් මැතිතුමා
15) ගරු මන්ත්‍රී ජේ. ජෙනාර්තනන් මැතිතුමා
16) ගරු මන්ත්‍රී අරිෆ් සම්සුදීන් මැතිතුමා
17) ගරු මන්ත්‍රී එම්.එස්. උදුමාලෙබ්බෙ මැතිතුමා
18) ගරු මන්ත්‍රී ජයන්ත විජේසේකර මැතිතුමා
19) ගරු මන්ත්‍රී පී. එල්. අරුණ සිරිසේන මැතිතුමා
20) ගරු මන්ත්‍රී අබ්දුල් රෂාක් මැතිතුමා
21) ගරු මන්ත්‍රී ටී. එම්. ජයසේන මැතිතුමා
22) ගරු මන්ත්‍රී කේ.පී.පී. ප්‍රේමකුමාර මැතිතුමා
23) ගරු අමාත්‍ය එස්. තන්ඩායුදපානි මැතිතුමා

**சமூகமளிக்காதோர் :**

1) கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர்
2) கௌரவ அமைச்சர் டபிள்யூ.ஜீ.எம்.ஆரியவதி கலப்பத்தி
3) கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் திரவியம்
4) கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சுபைர்
5) கௌரவ உறுப்பினர் அ.அமீர் மஹுமுத்லெப்பை
6) கௌரவ உறுப்பினர் ஆர்.எம்.சந்திரா பொடிமெனிக்கே
7) கௌரவ உறுப்பினர் டீ.வீரசிங்ஹ
8) கௌரவ உறுப்பினர் கே.புஷ்பகுமார்
9) கௌரவ உறுப்பினர் ஏ.டபிள்யு.பி.என்.மஞ்சுள பெனான்டோ
10) கௌரவ உறுப்பினர் சி. சந்திரகாந்தன்
11) கௌரவ உறுப்பினர் ஜெ. மொஹமட் லாஹீர்
12) கௌரவ உறுப்பினர் ஆதம்லெப்பை தவம்
13) கௌரவ உறுப்பினர் எம்.எப்.எம். ஷிப்லி
14) கௌரவ உறுப்பினர் எம்.என். அப்துல் மஜீட்

**නොපැමිණිම :**

1) ගරු මන්ත්‍රී අයි.එල්.එම්.මාහිර් මැතිතුමා
2) ගරු ඇමතිනි ඩබ්.ජී.එම්. ආරියවතී ගලප්පත්ති මැතිණිය
3) ගරු මන්ත්‍රී නාගලිංගම් තිරවියම් මැතිතුමා
4) ගරු මන්ත්‍රී එම්.එස්. සුබහිර් මැතිතුමා
5) ගරු මන්ත්‍රී ඒ. අමීර් මොහමෞද් ලෙබ්බෙ මැතිතුමා
6) ගරු මන්ත්‍රී ආර්.එම්.චන්ද්‍රා පොඩිමැණිකේ මැතිතුමිය
7) ගරු මන්ත්‍රී ඩී. වීරසිංහ මැතිතුමා
8) ගරු මන්ත්‍රී කේ. පුෂ්ප කුමාර් මැතිතුමා
9) ගරු මන්ත්‍රී ඒ. ඩබ්. බී. එන්. මංජුල ප්‍රනාන්දු මැතිතුමා
10) ගරු මන්ත්‍රී සී. චන්ද්‍රකාන්තන් මැතිතුමා
11) ගරු මන්ත්‍රී ජෙයිනුඩීන් මොහමඩ් ලාහීර් මැතිතුමා
12) ගරු මන්ත්‍රී ඒ. එල්. තවම් මැතිතුමා
13) ගරු මන්ත්‍රී එම්.එෆ්.එම්. සිබ්ලි මැතිතුමා
14) ගරු මන්ත්‍රී එම්.එන්. අබ්දුල් මජීඩ් මැතිතුමා

கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலக, ஹன்சாட் பிரிவினரினால் பிரசுரிக்கப்பட்டது.
නැගෙනහිර පළාත් සභා ලේකම් කාර්යාලයේ හැන්සාඩ් ඒකකය විසින් ප්‍රකාශයට පත් කරන ලදී.
மின் அஞ்சல்/ඊ-මේල්/e-mail : assembly@ep.gov.lk
☎ : 0094-0262226064

# இணைப்பு

# ඇමුණුම්

தொகுதி 05 இல 11
05 වැනි වෙළුම 11 වැනි කලාපය
Volume: 05 No 11

# கிழக்கு மாகாண சபை
# නැගෙනහිර පළාත් සභාව
# Eastern Provincial Council

2017 பெப்ரவரி 22 புதன்கிழமை
2017 පෙබරවාරි 22 වැනි බදාදා
2017 February 22 Wednesday